பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை (04.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 99

## தமிழருக்கு எதிரான இராணுவத் தாக்குதலை நிறுத்துமாறு இலங்கையை வற்புறுத்துக!

### இந்தியாவிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

சென்னை,மார்ச் 4

தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை உடனடியாக இந்தியா வற்புறுத்த வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படவேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு என்பதனையும் இந்தியா நினைவுபடுத்தவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா சென்னையில் வைத்து இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் கூட்டமைப்பு எம்.பிக்கள் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வைத்து இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

உலகத் தமிழர் சம்மேளனத்தின் தலைவர் ரி.ஆர்.ஜனார்த்தனனால் இந்தப் பத்திரிகையாளர் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது.

அங்குவைத்து நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்தாவது:-

மனித உரிமைகளை முற்றுமுழுதாக மீறும் கொடுமைகளே இலங்கையில் நடத்தப்படுகின்றன.

தான் நினைத்த தீர்வு ஒன்றைத் தமிழ் மக்கள் மீது திணிக்கும் நோக்குடன் அதனை

(03ஆம் பக்கம் பார்க்க)

## கந்தானை முத்துராஜவெலவில்

## புதர் மண்டிய சதுப்பு நிலத்தில் சூட்டுக் காயங்களுடன் 5 சடலங்கள்

### தலைநகரில் கடத்தப்பட்டோருடையதா?

கொழும்பு,மார்ச் 4

கொழும்பின் புறநகர்ப் பகுதியான கந்தானை பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட முத்துராஜவெல சதுப்பு நிலப்பகுதியிலிருந்து சூட்டுக்காயங்களுடன் அழுகிய நிலையில் ஐந்து ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

இச்சடலங்கள் அண்மைக்காலமாக கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கடத்தப்பட்டவர்களினுடையதாக இருக்கலாம் என்று பல வட்டாரங்களிலும் சந்தேகமும் அச்சமும் எழுப்பப்படுகின்றன. கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் இது பெரும் பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

செடிகொடிகள் முளைத்து வனாந்தரம் போன்று காட்சியளிக்கும் அந்தச் சதுப்பு நிலப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பட்டம் ஏற்றி விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவன் அங்கு சதுப்புக்குள் சில சடலங்கள் புதையுண்டு கிடப்பதைக் கண்டிருக்கின்றான். அந்தச்சிறுவன் பெரியவர்கள் மூலமாக பொலீஸாருக்குத்தகவல் கொடுத்தான். உடனடியாக அங்கு சென்ற பொலீஸார்

(04ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்!

### சர்வதேச சட்ட வல்லுநர் அமைப்புக் கண்டனம்

ஜெனிவா,மார்ச்4

இலங்கையில் அமுல்செய்யப்பட்டிருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அரச படையினர் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்று ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச சட்டவல்லுநர்கள் அமைப்பு குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு என்று கூறி இலங்கை அரசினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் பெரும்பாலும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்று கண்டித்திருக்கின்ற சர்வதேச சட்டவல்லுநர் அமைப்பு இதனால் அப்பாவிப் பொதுமக்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன; அவர்கள் பெரிதும் துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்என்றும்சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தற்போது இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்ற அந்த அமைப்பின்தலைவர்ஆதர் சவிர்ஹர்சன் இலங்கையில் இடம் பெறும் அரச படையினரின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை விமர்சித்து அங்கும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

''நீதியற்ற கொலைகள் காணாமற் போதல்கள், சித்திரவதைகள், முறையற்ற

(03ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய நெருக்கடியை ஆராய நோர்வேத் தூதுவர் கிளிநொச்சிக்கு

கொழும்பு, மார்ச்4

நாட்டின் அரசியல், இராணுச் சூழ்நிலைகளில் தற்போது உருவாகியுள்ள நெருக்கடியான நிலை குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரஸ்கர் இவ்வார ஆரம்பத்தில் கிளிநொச்சி செல்லவுள்ளார்.

அனேகமாக, திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை நோர்வேத் தூதுவர் கிளிநொச்சி செல்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

தூதுவர் பிரட்ஸ்கரின் விஜயம் குறித்து தமக்குத்தகவல் கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பாக இன்னமும் இறுதிமுடிவு செய்யப்படவில்லை என்றும் - விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் நேற்றிரவு தெரிவித்தது.

தூதுவர் எம்மைச் சந்திப்பதற்காக வரும் பட்சத்தில் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு காணப்படக்கூடிய எமது தரப்பு நிலைப்பாட்டை அவருக்கு விளக்குவோம் - என்று விடுதலைப் புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## திருமலையில் நேற்று இரு இளைஞர்கள் கொலை

திருகோணமலை, மார்ச் 4

திருகோணமலை கலப்பியாறு பிரதேசத்தில் நேற்றுமாலை இரு இளைஞர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

34 வயதுடைய அப்துல் ரகுமான் என்ற முஸ்லிம் இளைஞரும் 26 வயதுடைய பிரியந்த என்ற சிங்கள இளைஞருமே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அடையாளம்காணப்பட்டது. இது தொடர்பான மேலதிக விவரங்கள் நேற்று இரவு வரை வெளியாகவில்லை. (த-9)

## வதிரியில் நேற்று மோதல்

உடுப்பிட்டி, மார்ச், 4

வதிரி, புளியடிச் சந்தியில் நேற்றுமாலை 6.50 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அந்த மோதலில் ஏற்பட்ட சேதம் குறித்த விவரம் எதுவும் நேற்று இரவு வரை தெரியவரவில்லை. (அ-1-155)

## வவுனியா நகரில் வழமை நிலை உருவாக உடன் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்து

### படை, பொலீஸ் அதிகாரிகளுக்கு பிரதம நீதியரசர் உத்தரவு

கொழும்பு,மார்ச்4

வவுனியா நகரத்தில் சட்டத்தரணிகள் மற்றும் வர்த்தகர்கள் அச்சமின்றித் தமது பணிகளை மேற்கொள்ளவும், நகரத்தில் வழமை நிலையை ஏற்படுத்தவும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வவுனியாவின் கட்டளை அதிகாரி, பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதி மற்றும் சட்டத்தரணிகள் பிரதம நீதியரசரை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

சட்டத்தரணிகளிடம் கப்பம் கேட்டு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து அவர்கள் பிரதம நீதியரசரிடம் எடுத்துக் கூறினர்.

சட்டத்தரணிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாக அவர்கள் நீதிமன்றத்தைப் பகிஷ்கரித்தமை தொடர்பாக தமக்கு தகவல் கிடைத்ததும் உடன் பாதுகாப்பு அமைச்சுச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டு விவரங்களைத் தெரிவித்ததாகவும் -

சட்டத்தரணிகள் உயிர் அச்சுறுத்தல் இன்றிப் பணிபுரிவதன் மூலமே அங்கு சட்டம் ஒழுங்கைப் பேண முடியும் என அவருக்கு தெரிவித்தாகவும் - பிரதம நீதியரசர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

சட்டத்தரணிகளுக்கான பாதுகாப்பு உறுதிப்பாட்டை செயலாளர் கோத்தபாய தந்துள்ளார். எனவே அச்சமின்றி பணிபுரிய முடியும் என்றும் நீதியரசர் தெரிவித்தார்.

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வர்த்தகர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் மாலை 6 மணியுடன் நகரம் செயலிழக்கின்றது என்றும் நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

நகரின் பாதுகாப்பை உறுதிசெய்து வழமை நிலையை உடன் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் வன்னி கட்டளைத் தளபதி மற்றும் பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு பிரதம நீதியரசர் கட்டளை பிறப்பித்துள்ளார். (அ-1-203)

## ஜனாதிபதி இன்று நாடு திரும்புகிறார்

கொழும்பு, மார்ச் 4

ஆறு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் இன்று ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்புகின்றனர்.

இந்த விஜயத்தை அடிப்படையாகக் கொண்டு இரு நாட்டினதும் கூட்டறிக்கை இன்று வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் தங்கியுள்ள ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் நேற்று சீனாவின் கோபோய் பிரதேசத்திற்கு விஜயம் செய்து அங்கு அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய நீர் மின் உற்பத்தி நிலையத்தினைப் பார்வையிட்டுள்ளனர்.

## திருமலையில் தாக்குதல் இரு படையினர் பலி!

திருகோணமலை, மார்ச்.4

திருகோணமலை மாவட்டத்தில் மொறவேவ பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் 2 படையினர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்கள் என தேசிய பாதுகாப்பு தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (1-151-203)

## பாதுகாப்பு அமைச்சுச் செயலர் நேற்று கிழக்குக்கு விஜயம்

கொழும்பு, மார்ச் 4

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முப்படைத் தளபதிகளுடன் நேற்றுக் கிழக்குக்கு விஜயம் செய்தார்.

கிழக்குப் படைத் தளத்தில் வைத்து திருகோணமலை மற்றும் வெலிகந்த படைத் தளபதிகளைச் சந்தித்த அவர் அங்குள்ள பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்ந்தார்.

படையினரால் மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது குறித்து படை அதிகாரிகளுடன் கோத்தபாய ராஜபக்ஷ பேச்சுகளை நடத்தினார்.

பாதுகாப்புப் படைகளின் தளகர்த்தர் ஏயர் மார்ஷல் ஜி.டி.பெரேரா, முப்படைகளின் தளபதிகள், பொலீஸ் மா அதிபர் ஆகியோர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருடன் சென்றிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலை முறியடிக்க எடுக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து களத்தில் உள்ள தளபதிகள் பாதுகாப்புச் செயலாளருக்கு விளக்கினர். (அ-1)

## தஞ்சம் கோரி வரும் ஈழ அகதிகளை நெதர்லாந்து திருப்பி அனுப்பாது!

### அந்நாட்டு அரசு அறிவிப்பு

நெதர்லாந்து, மார்ச்4

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து நெதர்லாந்துக்குத் தஞ்சம் கோரி வருகின்ற ஈழ அகதிகளை அந்த நாடு திருப்பி அனுப்பாது என்று நெதர்லாந்து அரசு அறிவித்திருக்கின்றது.

இலங்கையில் அரசபடையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் யுத்தம் மூழக்கூடிய சூழல் ஏற்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக நெதர்லாந்து அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

சட்டவிரோதமான முறையில் - கப்பல் ஒன்றில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற 83 ஈழத்தமிழர்களை ஆஸ்திரேலிய கடற்படையினர் சமீபத்தில் கைது செய்தனர். அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்களா இல்லையா என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்ற நிலையில், அந்த அகதிகள் தொடர்பாக கருத்துவெளியிட்ட நெதர்லாந்து அரசு ''உயிராபத்தை எதிர் நோக்கி தஞ்சம் கோரிவரும் ஈழ அகதிகளை எமது நாடு இப்போதைக்கு திருப்பி அனுப்பாது'' என்று தெரிவித்திருக்கின்றது. (த-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக் கூட்டம்

11.02.2007 நடைபெற்ற நிர்வாகசபை தீர்மானத்திற்கு அமைய இன்று 04.03.2007 நடைபெறவிருந்த கூட்டத்தை தவிர்க்க முடியாத காரணத்தால் நடத்த முடியவில்லை. பொதுக்கூட்டம் 02.04.2007 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோயில் மண்டபத்தில் நடைபெறும். மகாசபை அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நீர்வேலி
ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்.

ச.க.முருகையா
செயலாளர், பரிபாலனசபை.

## கணனி விரிவுரையாளர் தேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடத்தப்படவிருக்கும் கணனி பயிற்சி நிலையத்திற்கு, **MS Office , DTP** பயிற்சி நெறிகளை பயிற்றுவிக்கக்கூடிய முழு / பகுதிநேர விரிவுரையாளர் தேவை. மேற்படி தகைமையுடையவர்கள் அவற்றை உறுதிசெய்யும் ஆவணத்துடனும் சுயவிவரக் கோவையுடனும் 15.03.2007 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். இ.செ.ச. உறுப்பினர் / தொண்டர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்கள் இ.செ.ச. பிரிவு தலைவர் / செயலாளர் சிபார்சுடன் விண்ணப்பங்களை கீழ்காணும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவை சங்கம்,**
**இல. 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



புன்னகை சிந்த தாய் மடியில்
04 ★ 10 ★ 1928

கண்ணீர் சிந்த அவனடியில்
17 ★ 02 ★ 2007

### திருமதி சிவபாக்கியம் ஜெகசோதி

திதி: 04.03.2007

எம் குலதெய்வத்தை இழந்து - நாம்
கதிகலங்கி நிற்கையிலே
ஓடோடி வந்து எமைத் தேற்றி - எம்
துயரத்தில் பங்கெடுத்து, தோள்கொடுத்த
உள்ளங்களுக்கு நன்றிகள் கோடி.

இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் நடைபெற இருக்கும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி சரவணபவன்,
(கணக்குப்பிள்ளை-கலட்டி அம்மன் தேவஸ்தானம்)
இல. 35, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

மின்சார உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் சிறுவர்களுக்கான சைக்கிள்கள் மற்றும் பொருள்கள் விற்பனைக்கு உண்டு.
70, நக்கா றோட், யாழ்ப்பாணம்.
(பொல்கோ பாடசாலைக்கு எதிராக) தொ.பே: 0775 943306.

## விற்பனைக்கு

Graphics DVD, கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.
விற்பனைத் திகதி 04.03.2007 (இன்று)
முகவரி: 44/3A, மணல்தரை லேன், கந்தர்மடம்.


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sirambiyadi Lane
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd.
(Near Uthayan Publication)
Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.,
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating Systems Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX
Course Fee :2000/=

ஒரேநாளில் ஆரம்பம் : 05/03/2007

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Batch I- 02/03/2007 , Batch II- 03/03/2007
Batch III- 04/03/2007 ,Batch VI- 07/03/2007


## கண்ணீர் அஞ்சலி



01.03.2007 அன்று அகால மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக கலைப் பீட 2ஆம் வருட இந்து நாகரிகத்துறை மாணவன்

### செல்வரட்ணம் சிவரஞ்சன்

அவர்களுக்கு எமது ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## சாந்திகம்

உளவளத்துணை நிலையம்
உளசமூகப் பணியாளருக்கான 6 மாத கால சான்றிதழ் பயிற்சி நெறி

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உளசமூகப் பணியில் கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனமாக உளவளத் துணை, உளசமூகத் தலையீடுகள் மற்றும் பயிற்சி நெறிகள் ஆகியவற்றைச் செயற்படுத்தி வரும் சாந்திகம் நிறுவனம் தற்போது உளசமூகப் பணியாளருக்கான சான்றிதழ் தர பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்காகப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப்பயிற்சி நெறி வாரநாள்களில் (9-4 மணிவரை) நடைபெறும்.

**விண்ணப்பதாரியின் தகைமைகள்:**

★ பட்டதாரிகள் - உளவியல், சமூகவியல், மானுடவியல், நுண்கலை அல்லது
★ க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்த விசேட திறமை, ஆற்றலுள்ளவர்கள்
★ அடிப்படை ஆங்கில, கணனி அறிவு விரும்பத்தக்கது.
★ வயது எல்லை 22-45 வயது

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பப்படிவங்களை எமது நிறுவனத்தில் பெற்று நேரடியாகவோ, தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சிக்கான கட்டணம் மற்றும் மேலதிக விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி : 09.03.2007

For Contacts:

**Excutive Director**
Shanthiham (Head Office) T.P. 021 222 3338
8/1, Katpahavinayakar Lane, 021 222 9720
Off Kachcheri Nallur Road, Jaffna. E-Mail : paych@sltnet.lk

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 - 05 - 1937

மறைவு
25 - 02 - 2005

### அமரர் கந்தர் சொக்கலிங்கம்

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த எங்கள்
அன்புத் தெய்வமே! ஆண்டுகள் இரண்டு
ஆனாலும் ஆறாது நம் துயரம்.

நி.மு. :மாசியம்பதி,
சண்டிலிப்பாய்.
த.மு. :மரகத விலா,
மெமோறியல் வீதி, மானிப்பாய்.

துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
27 . 04 . 1927

உதிர்வு
14 . 02 . 2006

### அமரர் கதிரவேற்பிள்ளை தனபாலசிங்கம் (சேதிபா)

திதி: 04.03.2007

உடம்பை வீட்டு உன் ஆவி பிரிந்தாலும்
நம் நெஞ்சை வீட்டு நீங்கிடுமோ உன் எண்ணம்
நீ இறக்கவில்லை அப்பா - என்றும்
எங்கள் கண்ணில் மலர்ந்து கொண்டிருப்பாய்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

என்றும் மறவாத அன்பு மகள்
த.சந்திராரூபி.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி சிவப்பிரகாசம்



தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மகாதனையை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவப்பிரகாசம் 25.02.2007 கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, தம்பிராசா, தருமலிங்கம், சபாரட்ணம், சிவசம்பு, மற்றும் தங்கரத்தினம், தனலட்சுமி ஆகியோரின் சகோதரரும் முகுந்தன் (ஜேர்மனி), சித்திரா, அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் தகப்பனும் நாகபூசணி, சிவராசா ஆகியோரின் மாமனும் பிரதீபா (லண்டன்), பிரபா (லண்டன்),மாயக்கண்ணன் (லண்டன்), பிரதாப், பிரசாந்தி, நர்மதன் ஆகியோரின் பேரனும் லஜினியின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 10 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தெஹிவளை கழுபோவளை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

20/9, 1/1 கரன் பிளேஸ்,
கழுபோவளை, தெஹிவளை.
0115522537.

தகவல்:
ம. சிவராசா (மருமகன்)
(30 பீ 0529 769 தெல்லிப்பழை).


சிறந்த தொழில் வாய்ப்பின் மூலம் ஒளிமயமான எதிர்காலம்

கடந்த நிதியாண்டில் மகத்தான சாதனைகளைப் புரிந்து, காப்புறுதி உலகில் வெற்றிக்கொடி நாட்டிய HNB அஷ்ஷுரன்ஸ் (இலங்கையின் மிகப்பெரும் தனியார் வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கியின் உப நிறுவனம்) சகிதம் உங்கள் தொழில் நிலையை முன்னேற்றி ஒளிமயமான எதிர்காலத்தில் பிரவேசிக்க இப்பொழுது சிறந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

**காப்புறுதி ஆலோசகர்**

யாழ்ப்பாணம் பிராந்திய காப்புறுதி நிலையத்திற்கு தேவைப்படுகின்றார்கள்

★ காப்புறுதி ஆலோசகர்கள் - ஆயுள் காப்புறுதி

தகைமைகள் - க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், சிங்களம் அல்லது ஆங்கில மொழி, கணிதம் என்பன உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தராதரங்களின் அடிப்படையில் நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

பயிற்சி - தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு பிரிவான பயிற்சியும் தொழிலறிவை விருத்தி செய்துகொள்வதற்கான கைநூல்கள் முதலியனவும் வழங்கப்படும்.

**உங்கள் தொழில்**

★ காப்புறுதி செய்ய விரும்புபவருடன் உரையாடி அவரது தேவைக்கும் வசதிக்கும் உகந்த ஆயுள் காப்புறுதித் திட்டத்தைத் தெரிவுசெய்ய உதவுதல்.
★ அவரது ஏனைய காப்புறுதித் தேவைகள் (வீடு, வியாபாரம், தொழிற்சாலை, வாகனம்) மற்றும் ஊழியர் நட்டஈடு வசதிகள் என்பன குறித்து ஆலோசனை வழங்குதல்
★ தொழிலறிவை இடைவிடாது விருத்தி செய்வதுடன் வாடிக்கையாளருடன் நம்பகமான நல்லுறவைக் கட்டியெழுப்புதல்.

**உங்களுக்குக் கிடைக்கும் நன்மை**

★ கவர்ச்சியான மாதச் சம்பளம், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் முதலியன.
★ சரியான காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக்கொடுப்பதன் சமுகத்திற்குச் சேவையாற்றும் வாய்ப்பு
★ திறமையை வெளிப்படுத்தி, காப்புறுதி ஆலோசகர்களின் அணிக்குத் தலைமை தாங்கும் நிலையை அடையும் வாய்ப்பு.

**அணித்தலைவர்கள் - ஆயுள் காப்புறுதி**

★ மேற்குறிப்பிட்ட அதே தகைமைகளுடன், காப்புறுதிச் சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம் அவசியம்.
★ சந்தைப்படுத்தல் அணிக்குத் தலைமை தாங்கும் ஆற்றலையும் நன்னம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டும்.

உங்கள் பூரண விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை அடுத்த 10 தினங்களுக்கு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

**Regional Manager,**
*Regional Office,*
*HNB Assurance,*
*No. 62,64 Stanly Road,*
*Jaffna.*

HNB ASSURANCE
For a brighter future


## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் கடை. கஸ்தூரியார் வீதியில் மாடிக் கட்டடம். கே.கே.எஸ். வீதியில் மாடிக் கட்டடம் ஆகியன கடைகளுக்கோ நிறுவனங்களுக்கோ வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
தொ.பே. இல: 021 222 2709.

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னுத்துரை பாலகி என்பவருடைய விசேட அடையாள அட்டை இல. 091030122, 25.02.2007 அன்று சாவகச்சேரிக்கும் நுணாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

## தவறிவிட்டது

NPJD 2842 எனும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு கோண்டாவிலுக்கும் மருதனார் மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நாதன் கடை, கே.கே.எஸ். வீதி, இணுவில் (இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்) எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## மணமகள் தேவை

கனடாவில் உள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 26, பூசம் 2ஆம் பாதம், செவ்வாய் 12இலும் 28 3/4 பாவக்கிரகமுடைய ஆணுக்கு பெண் தேவை. சுமார் ஐந்து வயது குறைவுடையவர் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும்.
55, சிவியர் லேன், யாழ்ப்பாணம்,
தொ.பே. 222 3772

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கில் 4 பரப்புக் காணியுடன் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
Mr.S.சண்முகசுந்தரம்
[illegible]
[illegible]339,
[illegible]67.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## அமைதிக்கு உதவாத அவலம் விளைவிக்கும் போக்கு

யாழ். குடாநாட்டில் இளம் தலைமுறையினர் - குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் - இலக்கு வைத்துக் கொல்லப்படுவதும் கடத்தப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் பெரும் பீதியையும் அச்சத்தையும் பதற்றத்தையும் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளன.

அரசாங்கத்தின்- அரச படைகளின்கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ். குடாநாட்டில் மனிதாபிமானமே இல்லாத - ஈவிரக்கமற்ற - கொடுமைகள் கட்டுமட்டில்லாமல் அரங்கேறிவருகின்றன.

'புலிப் பயங்கரவாதத்தைப் பதில் பயங்கரவாதத்தால் வெற்றிகொள்ளுதல்' என்ற இராணுவப் போக்கிற்கு கொழும்பு அரசு காட்டிய 'பச்சைக் கொடி' யின் விளைவுகளை யாழ். குடாநாடு இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கின்றது என்று குடாநாட்டு மக்களுக்கு மட்டுமல்ல உலகிற்கே தெரிந்த உண்மை.

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற தமது விநோதக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க முயன்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அதனடிப்படையில் மிக மோசமான, மிகக் கொடூரமான, சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத பயங்கரப் போரை தமிழர் தாயகத்தின் மீது தொடுத்தார். பேரழிவுகளையும் பெரு நாசங்களையும் தமிழர் தாயகம் அதனால் எதிர்கொள்ளவேண்டியதாயிற்று. ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானத்துக்கான போர் அவருக்கோ அவரது சிங்கள தேசத்திற்கோ சமாதானத்தையும் தரவில்லை; அமைதியையும் தரவில்லை; நிம்மதியையும் தரவில்லை; வெற்றியையும் தரவில்லை.

'சமாதானத்திற்கான யுத்தம்' மூலம் சமாதானத்திற்கான வாய்ப்புக்களைத் தொலைத்ததைத் தவிர வேறு நற்பயன் ஏதும் சந்திரிகா அரசுக்குக் கிட்டவில்லை. கிஞ்சித்தும் எதிர்பாராத இராணுவத் தோல்விகளையும் சந்தித்து, சமாதான முயற்சிகளையும் முன்னெடுக்கமுடியாமல் யுத்தத்தையும் தீவிரப்படுத்தமுடியாமல் 'இருதலைக் கொள்ளி எறும்பு' போன்ற நெருக்கடி நிலைக்குள் சிக்கியிருந்தது அவரது அரசு.

எடுத்த எடுப்பில் அவரது 'சமாதானத்துக்கான யுத்தம்' தந்த சில வெற்றிகள் - திருப்திகள், அந்தச் சகதிக்குள் நிரந்தரமாகவே அவரது அரசை மூழ்க வைத்து அமைதிவழிப் பாதைக்கு மீளமுடியாத நிலைக்குத் தள்ளிற்று.

அதேபோன்ற ஓர் கோட்பாட்டையே - கருத்தியல் சிந்தனையையே - தமிழர் தாயகத்தில் இப்போது கட்டவிழ்த்துவிட்டு நடைமுறைப்படுத்த எத்தனிக்கிறது மஹிந்தரின் அரசு.

இராணுவச் சிந்தனைப் போக்காளர்களின் கருத்தாக்கத்தில் சிக்கிய சந்திரிகா அரசு எவ்வாறு இராணுவ முனைப்புப் போக்கின்மூலம் சமாதானத்தை எட்டலாம் என்று கனவுகண்டதோ அதேபோன்று 'ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம் என்ற பயங்கரவாதத்தை பதில் பயங்கரவாதத்தால் வெற்றி கொள்ளலாம்' என்ற இராணுவப் போக்காளர்களின் மாயைச் சிந்தனை வலையில் சிக்கி நிற்கிறது மஹிந்தரின் இந்த அரசு.

சந்திரிகாவின் 'சமாதானத்துக்கான யுத்தத்தின்' ஆரம்பத்தில் சந்திரிகா அரசுக்கு சில இராணுவ வெற்றிகளும், திருப்திகளும் கிட்டியமை போல, இப்போது மஹிந்தரின் அரசின் 'பயங்கரவாதத்தைப் பதில் பயங்கரவாதத்தால் வெல்லுதல்' - என்ற கோட்பாட்டிலும் ஆரம்ப வெற்றிகள் சில மஹிந்தரின் அரசுக்குக் கிட்டாமல் இல்லை.

ஆனால், அது நிரந்தரப் பலன்தருமா என்பதே கேள்வி. இந்த மோசமான - கொடூரமான - படு பயங்கரமான - அழிவுச் சித்தாந்தத்தின் விளைவும், பெறுபேறும் எப்படி அமையும் என்பது குறித்து உருப்படியான சிந்தனைத் தெளிவோ, தெளிவான தீர்க்கதரிசனமோ இல்லாமல் அது முன்னெடுக்கப்படுவதால், விதைத்தவற்றையே வினையாகவும், விளைவாகவும் அறுக்கவேண்டி நேரலாம். முந்திய பாடத்திலிருந்து உணரலாம்.

ஈழத்தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போராட்டம் அதன் ஆரம்ப காலகட்டத்தில் - சுமார் இரண்டரை தசாப்தகாலம் - காந்திய வழியில், அஹிம்சைப் பாதையில், சாத்வீக முறையில் நெறிப்பட்டதாகவே முன்னெடுக்கப்பட்டது.

காந்திய நெறியின் உயரிய விழுமியங்களைப் புரிந்துகொள்ளாத பேரினவாதம், அதனை அரச பயங்கரவாதம் மூலம் - பலாத்காரம் மூலம் - அடக்கி ஒடுக்க முயன்றது. அத்தகைய கொடூரப் போக்கின் விளைவாகவே தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதம் தாங்கிய எதிர்ப்புப் போராட்டமாக வடிவெடுத்தது.

இந்தத் தாற்பரியத்தை - காரண, காரியத்தை - புரிந்துகொள்ளாத அல்லது புரிந்துகொள்ள விரும்பாத தென்னிலங்கை மீண்டும் மீண்டும் அதே வழியில் தவறிழைக்க முனைப்புடன் முயல்கிறது.

சட்டரீதியான அரசாக உலகின்முன் தன்னைக் காட்டிக்கொள்ளும் - பிரகடனப்படுத்திக்கொள்ளும் - கொழும்பு அரசு, தமிழர் தாயகத்தில் சட்டமுறையற்ற செயல்வடிவம் கொண்ட ஒரு போரியல் வடிவத்தை ஏவிவிட்டிருக்கின்றது.

மரணங்களும், படுகொலைகளும், கோர வன்முறைகளும் இனந்தெரியாத தரப்புகளினால் புரியப்படுகின்றன எனக் கூறப்படுவதற்கு அந்த வன்முறைகள், கொலைகள் போன்றவை தொடர்பாக உரிய சாட்சியங்கள் இல்லாமை காரணமாக இருக்கலாம். மனித உரிமை அமைப்புகளையும், சர்வதேச சமூகத்தையும், நீதியின் பாற்பட்ட செயற்பாடுகளையும், நீதிமன்றங்களையும் ஏமாளியாக்க இவ்வாறு சாட்சியங்களற்ற வகையில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் அராஜகம் - பயங்கரவாதம் - உதவலாம்.

ஆனால், மக்களின் மனதை வெல்ல அவை உதவமாட்டா. அதற்கு மாறாக இத்தகைய வன்முறைக்கு எதிராக மக்களைக் கிளர்ந்தெழவைக்கும் பற்றுறுதியையும், உணர்வெழுச்சியையுமே அவை மக்களுக்குத் தரும். அதனால், வினை விதைத்தவர்களுக்கு எதிராகவே விளைவு மோசமாகக் கிளம்பும் என்பது யதார்த்தம். உலக சரித்திரம் தந்த பாடமும் அதுவே.

தமிழர் தாயகத்தை வன்முறைப் புயலில் சிக்க வைப்பதன்மூலம் அமைதி பிறக்காது. இலங்கைத் தீவு முழுவதும் பரவவே அது வழிசெய்யும். இதுவே மெய்யுண்மை நிலையாகும்.

# வரப்போகும் பெரும் போரை வன்னி மக்களே முறியடிப்பர்!

## 'விடுதலைப் புலிகள்' ஏடு கருத்து!

கொழும்பு, மார்ச் 4

வன்னி மீதான ஒரு பெரும் போருக்காக சிங்கள அரசு அனைத்து வகை தயார்ப்படுத்தல்களையும் மேற்கொண்டு வருகிறது. சிங்கள அரசின் இந்தப் பெரும் போரை துணிவுடன் எதிர்கொள்வதைத் தவிர தமிழ் மக்களுக்கு மாற்றுவழிகள் இல்லை. இனி வரப்போகும் பெரும் போரையும் முறியடிக்க வன்னி மக்களே புலிகள் இயக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

- இவ்வாறு கடந்த வியாழக்கிழமை வெளிவந்த விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' ஏடு தெரிவித்துள்ளது.

''கொடூரமான முற்றுகை போர் முறையுடன் கிழக்கு மாகாணத்தில் தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கும் இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்று வரும் அதே நேரத்தில் வடக்குப் போர் முனையிலும், வன்னி மாநிலம் மீதும் பெரும் முற்றுகைப் போர் நடவடிக்கையை தொடக்க சிங்களப் படைகள் முன் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளன''- என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் ஏட்டின் முதன்மைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த வியாழக்கிழமை வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் முதன்மைச் செய்தியானது மேற்கண்டவாறு தெரிவிக்கின்றது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''மகிந்த ராஜபக்ச முதல் சரத் பொன்சேகா வரை சிங்களத்தின் அரசியல் இராணுவத் தலைவர்கள் தமிழருடனான போரை விரிவாக்கி தீவிரப்படுத்துவதிலேயே குறியாக உள்ளனர்.

தமிழர்களுக்கு எதிராக இனவாதப் போர் கூச்சலிடுவதே இன்று சிங்களத்தின் பிரதான அரசியலாக உள்ளது. ஒரு போர் வெற்றி பற்றிய கற்பனையிலேயே சிங்கள ஊடகங்கள் மிதந்தபடி உள்ளன.

வடபுலப் பெரும் போருக்கு முன்னோடியாக அங்கே வான் தாக்குதல்களை சிங்களப் படைத் தலைமை தீவிரப்படுத்தியுள்ளது. வடக்கிலுள்ள சிங்கள படையணிகளின் தலைமைப் பொறுப்புக்களிலும் தீவிர மாற்றங்கள் செய்யப்பட்டு படைகள் போருக்கு தயார்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மக்களை கொலை செய்து வெறியாட்டம் ஆடிப் புகழ்பெற்ற சிங்களத்தின் இடைநிலைத் தளபதிகளை படையணிகளின் தளபதிகளாக சரத் பொன்சேகா நியமித்து வருகின்றார். 57 ஆவது படையணியென்ற பெயரில் புதிய தாக்குதல் படையணியையும் உருவாக்கியுள்ளார். இது வவுனியாவில் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளது.

மஹிந்தரின் சீன விஜயமும் ஆயுதக்கொள்வனவுடன் இணைத்துப் பேசப்படுகின்றது. சிங்கள அரசிற்கு ஆயுதங்களை இப்போது வழங்கி வரும் நாடுகளில் சீனா முக்கியமானதாகும். பாகிஸ்தான், ஈரான் நாடுகளில் இருந்தும் அரசு ஆயுத தளபாடங்களை குவித்து வருகின்றது.

கொழும்பில் மஹிந்த அரசின் உறுதித்தன்மையும் இப்போது அதிகரித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தில் மஹிந்த அரசு அரசியல் உறுதி பெற்றுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் உறுதித்தன்மை தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பை போரை தீவிரப்படுத்தப்படுவதற்கு தான் பயன்படுத்துவது சிங்களத்தின் ஒரு வரலாற்று வழமை.

ஜே.ஆர். அரசும், சந்திரிகா அரசும் இவ்விதமாக தாம் பெற்ற அரசியல் உறுதித்தன்மையைப் போரில் தீவிரப்படுத்தவே பயன்படுத்தியிருந்தனர். இப்போது மஹிந்தரும் அந்த வரலாற்றுத் தடத்திலே பயணிக்கின்றார்.

தமிழின அழிப்பு விடயத்தில் உலகின் கண்டனங்களையும், அரசியல் அழுத்தங்களையும் மஹிந்த அரசு ஒரு பொருட்டாக மதிப்பதாக தெரியவில்லை. வன்னி மீதான ஒரு பெரும் போருக்காக சிங்கள அரசு அனைத்து வகை தயார் படுத்தல்களையும் செய்து வருகின்றது என்பது தான் உண்மையாகும்.

சிங்கள அரசின் இந்த பெரும் போரை துணிவுடன் எதிர்கொள்வதை தவிர தமிழ் மக்களுக்கு மாற்று வழிகள் ஏதுமில்லை.

தமிழரின் படைப் பல அதிகரிப்பும் கடந்த போர்காலங்களைப் போல் தமிழ் மக்களின் வீரச் செயற்பாடுகளும் சிங்களத்தின் போரை முறியடிக்க போதுமானவையாகும். அண்மைய மாதங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் புலிகள் அணியுடன் இணைந்துள்ளனர். ஆட்பலத்தில் புலிகள் இயக்கம் பெரிய வளர்ச்சியை கண்டு வருகின்றது.

'வீட்டுக்கு ஒருவர் நாட்டிற்காக' என்ற போராட்ட கோஷம் இன்று தமிழர் படை பலத்திற்கு நம்பிக்கையான அடித்தளமிட்டு வருகின்றது. இந்த போராட்ட கோஷம் முழுமை அடையும் வகையில் ஒவ்வொரு வீடும் ஒரு வீரனை அல்லது வீராங்கனையை களம் அனுப்பி இந்த ஆட்பல அதிகரிப்பு திட்டத்தை முழுமையை அடைய செய்விப்பது தமிழரின் வரலாற்று கடமையாகிவிட்டது.

எதிரியின் 'ஜெயசிக்குறு' ஆக்கிரமிப்புத் திட்டத்தை புலிகள் இயக்கம் முறியடித்து வெற்றிவாகை சூட உறுதுணையாக இருந்த வன்னி மக்களே இனிவரப் போகும் பெரும் போரையும் முறியடிக்க புலிகள் இயக்கத்திற்கு ஒத்துழைப்புக்கள் வழங்க வேண்டும்.

தமிழீழ தனியரசை அமைக்கும் நில மீட்புக்கான போர் வன்னிப் பெருநிலப்பரப்பை உந்துதளமாகக் கொண்டே இயங்கப் போகின்றது.

வரப்போகும் போர் காலத்தையும் அதன் நெருக்கடிகளையும் சவாலாக எதிர்கொண்டு போரை வென்று புதிய வரலாறு படைக்க தயாராகுவோம்'' - என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதத்தில் கைதுசெய்து தடுத்து வைத்திருத்தல் ஆகியவற்றுடன் இலங்கை அரசின் இராணுவத்தினர் தொடர்புபட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசரகாலச் சட்டம் என்பவற்றின் விதிகள் முறையாக வரையறை செய்யப்படாததால் சந்தேக நபர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன'' என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

### தமிழருக்கு எதிரான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பதற்கு வலுவற்றவர்களாக்கி பல வீனப்படுத்தவதற்காகவே, இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆயுதப் படையினரே தமிழ் மக்களை கடத்துவதோடு மட்டுமன்றி சட்டத்துக்குப் புறம்பான விதத்தில் பெரும் எண்ணிக்கையில் தமிழர்களைக் கைதுசெய்தும் தடுத்து வைத்தும் கொடுமைப்படுத்தி வருகின்றனர்.

ஈழத்தமிழ்மக்களின் அவலங்கள் விரைவில் நீங்கும்வகையில் இந்தியா உறுதியுடன் காத்திரமான முறையில் செயற்படவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஈழத்தமிழர் விடயத்தில் தமிழகம் தானாகவே அக்கறையுடனும் உணர்வுபூர்வமாகவும் செயற்படுவது குறித்து எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று ஸ்ரீ காந்தா சொன்னார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் -

ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடிய மூலப் பொருள்களை - வெடி பொருள்களை - விடுதலைப் புலிகள் கடத்துவதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

வெடிப்பொருள்களைச் சட்ட விரோதமாக தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு எடுத்துச்செல்லும் கடத்தல்காரர்கள், தமது அமைப்பின் பெயரைப் பயன்படுத்துவதாக விடுதலைப் புலிகளின் தலைவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் தமிழகத்தில் இருந்து வெடிபொருள்களைக் கடத்துவதாகக் கூறப்படுவது முழுப்பொய் - வேண்டுமென்றே செய்யப்படும் பொய்ப் பிரசாரமாகும் - என்று சொன்னார். (அ)

## பல்கலை. அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர் தூதுக்குழு பிரதி உயர்கல்வி அமைச்சர் முஸ்தபாவுடன் நேற்றுச் சந்திப்பு

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மருத்துவத்துறை, பொறியியல்துறை மாணவர்களின் தூதுக்குழு உயர்கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவை நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அச்சந்திப்பில் கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் சிறிபிரசாந் தனும் பாதிக்கப்பட்ட மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் உள்ளீர்ப்பு விவகாரத்தில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக அமைச்சருக்கு அவர்கள் எடுத்துரைத்தனர்.

யாழ்.மாவட்ட மாணவர்களின் அனுமதி தொடர்பாக கைக்கொள்ளப்பட்ட வழிமுறைகள் குறித்த தெளிவான விளக்கங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து பெறவுள்ளதாகவும் -

அதன் பின்னர் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு வழிசெய்வது குறித்து தாம் கலந்தாலோசனை நடத்தவுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்குழு கூட்டத்தில் இது சம்பந்தமான விவரங்களையும் விளக்கங்களையும் தாம் அறியவுள்ளதாக பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் மாணவர் உள்ளீப்புத் தொடர்பான விவரங்களைப் பகிரங்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் - அமைச்சர் தூதுக் குழுவினரிடம் தெரிவித்தார். (அ-1-வ)

## சேலத்திலிருந்து எடுத்துவரப்பட்ட குத்தரிசிக்கு 60ரூபா விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

தமிழ்நாடு சேலத்திலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள குத்தரிசி -சிவப்பு நாட்டரிசி - கிலோ 60 ரூபாப் படியே விற்பனை செய்யப்படவிருக்கின்றது என்று அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

சேலத்தில் இருந்து 'டப்ளின்' என்ற கப்பலில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் குத்தரிசி எடுத்து வரப்பட்டது. இக்கப்பலில் இருந்து அரிசியை இறக்குவதற்கு தாமதம் ஏற்பட்டதால், கப்பல் கட்டணம் கூடுதலாகச் செலுத்த வேண்டியதாயிற்று. ஏற்கனவே 48ரூபாவுக்கு இந்த அரிசியை விற்பனை செய்ய விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

தற்சமயம் இந்த அரிசி 59 ரூபாவுக்கு ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்கப்படும். அந்த அரிசியின் சில்லறை விலை 60 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1)

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

### வலி.மேற்கில் நேற்றுத் தேடுதல்

பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை உள்ளிட்ட வலி.மேற்குப் பிரதேசங்களில் நேற்றுக்காலை 5.30 மணி முதல் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் இடம்பெற்றன.

இதன்போது இளவயதினர் புனித செபஸ்தியார் ஆலய முன்றலிற்கு கொண்டு செல்லப்பட்டு அவர்களது அடையாள அட்டைகள் சோதிக்கப்பட்டதுடன் வீடியோப் படமும் பிடிக்கப்பட்டது.

இச்சுற்றிவளைப்பினால் மேற்படி பிரதேசத்திற்கான பஸ் சேவைகள் நேற்று இடம்பெறவில்லை. (135)

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உணவுப் பொருள் விநியோகம்

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உலக உணவுத் திட்ட உணவுப் பொருள் விநியோகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவேலி மாதிரி விற்பனை நிலையத்தில் நடைபெறவுள்ளது. (1-202)

### பல்கலை. மாணவருக்கான பயணப் பதிவு இன்று

யாழ்ப்பாணம், மார்ச்.4

யாழ்.மாவட்டத்திலிருந்து தெற்குப்பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களை இன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் கப்பல் பயணத்திற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி கேட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு விபுலானந்தா நுண்கலைக் கல்லூரி அனுமதிக்காக நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட மாணவர்களும் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். (1-21)

### மொறட்டுவ பல்கலைக்கு தெரிவான மாணவர் விவரம்

யாழ்.மாவட்டத்திலிருந்து மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு 2006/2007 கல்வியாண்டில் பொருளியல் மற்றும் முகாமைத்துவ கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு கிடைத்துள்ளன.

மேற்படி கற்கை நெறிகளுக்கான ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் 13, 14, 15ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்களை 'உதயன்' அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

### நேர்முக விசாரணை நாளை

வெளிமாவட்டங்களில் கடமையாற்றி தற்போது போக்குவரத்துச் சீரின்மையால் கடமைக்குச் செல்லாதிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்குவது தொடர்பாக நடைபெற்ற நேர்மக விசாரணையில் தோற்றத் தவறியவர்களுக்கென நாளை மேற்படி விசாரணை நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இவ்விசாரணைக்கு முன்னர் தோற்றத் தவறிய அனைத்து உத்தியோகத்தர்களையும் தவறாது சமூகம் தருமாறு யாழ். பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார். (1-202)

### நாளை

மாசி - 21
திங்கட்கிழமை
05.03.2007
திதி: பிரதமை
காலை 6.52
நட்சத்திரம் : உத்தரம்
முன்னிரவு: 10.27
சுபநேரம் : 12.26 - 01.56
ராகுகாலம் : 07.56 - 09.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Walk In Interview**
## காப்புறுதி ஆலோசகர் பதவி

2006 இல் சிறந்த சேவை வழங்கும் கம்பனியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனசக்திக் காப்புறுதிக் கம்பனியில் இணைந்து கொள்வதற்கான அரிய வாய்ப்பு.

பதவி:- காப்புறுதி ஆலோசகர்
தகைமை:- க.பொ.த. (சா/த) சித்தி (குறைந்தது)
க.பொ.த. (உ/த) சித்தி (விரும்பத்தக்கது)
சரளமாக உரையாடும் திறன்

நேர்முகத்தேர்விற்குரிய ஆவணங்கள் மற்றும் உடை என்பன சிறப்பாகக் கவனிக்கப்படும்.

நேர்முகத் தேர்வு
இடம்பெறும் இடம்: ஜனசக்தி காப்புறுதி கம்பனி
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 09.03.2007 வெள்ளி, 10.03.2007சனி
நேரம்: காலை 09.00 - 12.00 வரை (58537)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 - 11 - 1966
ஆண்டவன் அழைப்பில் 02 - 02 - 2007

### அமரர் சிவலிங்கம் உதயச்சந்திரன்

வாழ்க்கை ஒரு வசந்தமென
வாழ்ந்திருந்தவேளை
வந்ததே காலனவன்
வழிதடுமாறி விழிகளில் நீருடன்
வாசலில் நின்று வாடுகிறோம்.

கடந்த 02.02.2007 சிவபதமடைந்த எமது குலதெய்வம் அமரர் சிவலிங்கம் உதயச்சந்திரன் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலை மேற்கு, சுன்னாகம். (58601) மனைவி, பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் நிதிமுகாமைத்துவஉதவியாளர் திருமதி இ.டர்சினா அவர்களின் அன்புக் கணவர்

### இராஜேந்திரம் இளஞ்செல்வன்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
(சி-52145)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விஜயரத்தினம் துரைராணி
(மதன் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி)



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரத்தினம் துரைராணி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும் சுரேஸ்குமார், மதனகுமார் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2007)ஞாயிறுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:பிள்ளைகள்
சுரேஸ்குமார், மதனகுமார்,
அனுசியா, குமார்.

### செல்லையா தங்கம்மா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தங்கம்மா நேற்று (03.03.2007)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னையா - பொன்னு தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற சின்னக்குட்டி - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (காலால் திணைக்களம்) மற்றும் மகேந்திரன் (உப்புக் கூட்டுத்தாபனம்), குலேந்திரன் (குலம்), விக்கினேஸ்வரன் (நாடாளுமன்றம்), தர்மாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராசம்மா மற்றும் கனகவதி, தையல்நாயகி, திருச்சிற்றம்பலம், வெள்ளியம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்களாதேவி, லோகேஸ்வரி, வரதலட்சுமி, காந்தினி, நவரட்ணராஜா (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியும் ரமேஸ்கரன், சுபாஸ்கரன், அருங்கரன், மீரா, அபிராமி, பிரியங்கா, ஆரூரன், தர்சினி, கிருத்திகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 5, முதலியார் லேன், நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். (58614)
தகவல்: நவரட்ணராஜா (மருமகன்).

## புதர் மண்டிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த இடத்திலிருந்து மூன்று சடலங்களை மீட்டனர்.

அந்தச் சடலங்கள் மீட்கப்பட்ட இடத்திற்கு அருகிலுள்ள புதர்ப்பகுதியில் நேற்றுக் காலை பொலீஸார் தேடுதல் நடத்தினர். அதன்போது மேலும் இரு சடலங்களை அவர்கள் கண்டெடுத்தனர்.

ஐந்து சடலங்களும் உப்பிப் பெருத்து அழுகிய நிலையில் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தன. அவற்றை ராகம வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று பரிசோதித்த போது ஐந்து சடலங்களிலும் சூட்டுக் காயங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அடையாளம் காணமுடியாத நிலையில் இந்தச்சடலங்கள் சிதைவடைந்திருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சதுப்பு நிலப்பகுதியில் மேலும் சடலங்கள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதால் அப்பகுதியில் தொடர்ந்தும் தேடுதல் பணியில் பொலீஸார் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தச் சடலங்கள் தொடர்பாக துரித விசாரணைகளை மேற்கொள்வதற்கென விசேட பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. இவை சமீப காலமாக கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதியில் கடத்தப்பட்ட அல்லது காணாமல்போன இளைஞர்களில் சிலரது சடலங்களாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (த-9)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் திருமதி மங்கையர்க்கரசி விக்னேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

**எஸ்.நடராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை செலுத்துகின்றோம்.

யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக்
கூட்டுறவுச் சங்கம். (58544)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் மகேந்திரன்

சாவகச்சேரி வடக்கு, பெரிய அரசடி, தாமோதரம்பிள்ளை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் மகேந்திரன் (சாவகச்சேரி ப.நோ.கூ.ச) 03.03.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - அன்னலட்சுமி தம்பதியரின் மகனும் விசுவலிங்கம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவமணியின் அன்புக் கணவரும் டிலோஷாவின் (7ஆம் ஆண்டு மாணவி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி) தந்தையும் நாகேந்திரத்தின் (பரிசோதகர், இ.போ.ச. யாழ்ப்பாணம்) சகோதரனும் ரத்தினபூபதியின் (ஆசிரியை - கொடிகாமம் வீரசிங்கம் மகாவித்தியாலயம்) மைத்துனரும் நிறோசன், ஆஷாயினி, தஷாயினி ஆகியோரின் சிறியதந்தையும் கண்மணி, காலஞ்சென்ற தவமணி, சக்திவேல் (இத்தாலி), ஜெயமணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.
தகவல்: சு.நாகேந்திரம் (சகோதரர்).

### திருமதி பிரதீபா ஜெயராசலிங்கம்



நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரதீபா ஜெயராசலிங்கம் நேற்று (03.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) - மனோன்மணி, தம்பதியரின் அன்பு மகளும் ஜெயராசலிங்கத்தின் அன்பு மனைவியும் கியூசாவின் அன்புத் தாயும் தருமலிங்கம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் பகீரதன் (கதிரியலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), சுதர்சன், வசீகரன், கிரிதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நிர்மலாதேவி (பிரான்ஸ்), குகதாசலிங்கம் (கனடா), கிருஸ்ணாதேவி(கனடா),ரூபலிங்கம் (பிரான்ஸ்), விஜயராஜலிங்கம் (கனடா),வக்சலாதேவி (வவுனியா), சலசாதேவி (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: (58608)
நீர்வேலி மத்தி, நீர்வேலி.
இ.பாலசிங்கம் (தந்தை), [illegible]

## ஓராண்டு நினைவு



### அமரர் தில்லை கருணானந்தன் (பாபு)

பிறப்பு: 31.12.1961 இறப்பு: 18.04.2006
திதி: 05.03.2007

நாளை 05.03.2007 அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்மன் கோயிலடி, சங்குவேலி, மானிப்பாய். (58545)
பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.
தகவல்: சின்னவி ரத்தினம் (மாமன்).

## மரண அறிவித்தல்கள்

### வயிரவப்பிள்ளை நடராசா (கொக்குவில்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான வயிரவப்பிள்ளை நடராசா 28.02.2007 புதன் கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் வரதராஜன் (ஹொலண்ட்), மங்கையர்க்கரசி (தாதி - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), புஸ்பராசா (ஆசிரியர், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), கலையரசி (கொழும்பு), அபராஜிதன் (ராஜி - இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான வயிரவப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் இராசம்மா, பரஞ்சோதி, காலஞ்சென்ற றோசம்மா, அருளம்மா, செல்லத்துரை, இராசதுரை, இராசக்கோன் (திருகோணமலை) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற இலங்கநாதன், அழகரத்தினம், சரசுவதி, சின்னராசா, செல்வரட்ணம் (அம்மா அச்சகம், இணுவில்), ஞானமணி (லண்டன்), இந்திராணி, பத்மானந்ததேவி, அருளானந்தசிவம் (லண்டன்), ஸ்ரீகிருஷ்ணராஜா, மல்லிகாதேவி, சுபத்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற திருமதி நாகம்மா கனகராஜா (மில்க்வைற், யாழ்ப்பாணம்), திருமதி செல்லம்மா தருமலிங்கம் ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற சின்னத்துரையின் தாய்மாமனும் புஸ்பவதனி (ஹொலண்ட்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், பொன்தாமரைச்செல்வி, சசிக்குமார் (உதவி தர நிர்ணயாளர், சென். அன்ரனிஸ் இன்டஸ்றீஸ் குறூப் லிமிட்டட், பொறளை) ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரகானன் (மாணவன், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), சதீஸ்ஷரன் (மாணவன், யா/சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), பிரசன்னன் (ஹொலண்ட்), பிரகர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஸ்ரீ விக்னேஷர மஹால்'
58/1, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (58548)
தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொ.பே. 0777179461, 0779361332

### வைத்திலிங்கம் ஸ்ரீஸ்காந்தன்
[இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்]

அளவெட்டி, கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா குருமன்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் ஸ்ரீஸ்காந்தன் 28.02.2007 புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் க.வைத்திலிங்கம் மற்றும் திருமதி சிவசிதம்பரம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற பண்டிதர் வ.செல்லையா - திருமதி செல்லையா தம்பதியரின் மருமகனும் திருமதி புவனேந்திரராணியின் (ஆசிரியர், இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை) அன்புக் கணவரும் இந்துசா, தேனுஜன், நிருஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஞானலிங்கம் மற்றும் செல்வராணி, யோகநாதன், தியாகலிங்கம், வரதலிங்கம், கணேசலிங்கம், செல்மதி ஜெயக்குமார் ஆகியோரின் பாசமுள்ள சகோதரருமாவார்.

அன்னாரது பூதவுடல் 02.03.2007 வெள்ளிக்கிழமை வவுனியா இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம், அளவெட்டி. (58604)
தகவல்: திருமதி சி.வைத்திலிங்கம் (தாய்), வைத்தியர் வை.வரதலிங்கம் (சகோதரன்)

### திருமதி பத்மராணி (நந்தினி) இரட்ணசிங்கம்

திருமதி பத்மராணி (நந்தினி) இரட்ணசிங்கம் 22.02.2007 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இரட்ணகுமார் இரட்ணசிங்கத்தின் அன்பு மனைவியும் அபிஷாவின் பாசமிகு தாயும் கனகரட்ணம், பொன்னையா (இளைப்பாறிய அதிபர், கட்டுவன்)- அருந்தவம் (இளைப்பாறிய ஆசிரியை, வடலியடைப்பு) தம்பதியரின் அருமை மகளும் பவானி (பிரான்ஸ்), கனகசுதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசிங்கம் (கனடா), சோமசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியர், சண்டிலிப்பாய்), பாலநாதன் (இளைப்பாறிய ஆசிரியர், கட்டுவன்), காலஞ்சென்ற புட்கமலாதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு பெறாமகளும் ஆவார்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(58606)
தகவல்: இரட்ணகுமார் 0331442380З7
பவானி 0333804З4893 (பிரான்ஸ்).

### சிவக்கொழுந்து சிவசுந்தரம்



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவக்கொழுந்து சிவசுந்தம் 27.02.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்து - செல்லம்மா தம்பதியரின் மகனும் கணவதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் சீதாலட்சுமியின் கணவனும் ரமேஸ், சுயாஜினி, சுரேஸ் (மகிந்தா), சபேஸ் ஆகியோரின் தந்தையும் பிரமிலா, யோகரட்ணம், சகிலா ஆகியோரின் மாமனும் நிலான், மிதுன், தபிதா, கல்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (சி-52141)
தகவல்: மனைவி, மக்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org